## நடப்பாண்டில் உலக வங்கி உதவியுடன் 120 வட்டாரங்களில்

# ரூ.1000 கோடியில் ‘வாழ்ந்து காட்டுவோம் திட்டம் 3.0’ துவங்க நடவடிக்கை!

## சட்டப்பேரவையில் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அடுக்கடுக்கான அறிவிப்புகள்!

**சென்னை, மார்ச் 30-**

**நடப்பாண்டில் 120 வட்டாரங்களில் உலக வங்கி உதவியுடன் ரூ.1000 கோடி மதிப்பீட்டில் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் 3.0 துவங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பன உள்ளிட்ட 22 அறிவிப்புகளை பேரவையில் சிறப்புத் திட்ட அமலாக்கத்துறை மானியத்தில் பதிலளித்து உரையாற்றுகையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் குறிப்பிட்டார்.**

அவரது அறிவிப்புகள் வருமாறு:-

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**

**1. வாழ்ந்து காட்டுவோம் திட்டம் 2.0 வெற்றி பெற்றதன் அடிப்படையில், நடப்பாண்டில் மேலும் 120 வட்டாரங்களில், 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில், உலக வங்கியுடன் இணைந்து வாழ்ந்து காட்டுவோம் திட்டம்-3.0 துவங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.**

வாழ்ந்து காட்டுவோம் திட்டம் 2.0ன் வெற்றி மற்றும் கற்றல்களின் அடிப்படையில் மிகவும் ஏழைகள்மீது சிறப்பு கவனம் செலுத்துவதுடன் தொழில் முனைவுக்கு ஏற்ற சூழல் மேம்பாட்டு அணுகுமுறையுடன் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்காக, வாழ்ந்து காட்டுவோம் திட்டம் 3.0 உலக வங்கி நிதி உதவியுடன், 120 ஊரக மற்றும் நகரத்தை சுற்றியுள்ள வட்டாரங்களில் 1,000 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் விரிவாக்கம் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**2. 42,000 கிராமப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் சுய வேலை வாய்ப்புடன்கூடிய திறன் பயிற்சி 66 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.**

திறன் பயிற்சியானது கிராமப்புற இளைஞர்களின் திறனை மேம்படுத்தி வேலைவாய்ப்பு பெறுவதற்கான தகுதியை உருவாக்கி வேலைவாய்ப்புகளை உறுதி செய்கிறது. இந்த ஆண்டு 42,000 கிராமப்புற இளைஞர்களுக்கு 66 கோடி ரூபாய் செலவில் வேலை வாய்ப்பு மற்றும் சுய வேலைவாய்ப்புடன்கூடிய திறன் பயிற்சி வழங்கப்படும்.

**3. பழங்குடியினர், முதியோர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநங்கையர் உள்ளிட்ட 2,500 சிறப்பு சுய உதவிக் குழுக்களுக்கு நடப்பாண்டில் 25 கோடி ரூபாய் வாழ்வாதார நிதியாக வழங்கப்படும்.**

விளிம்பு நிலையிலுள்ள பழங்குடியினர், முதியோர், மாற்றுத்திறனாளிகள், திருநங்கையர் உள்ளிட்ட 2,500 சிறப்பு சுய உதவிக் குழுக்களின் சமூக, பொருளாதார தரத்தை மேம்படுத்திடவும், உகந்த வாழ்வாதார நடவடிக்கைகளில் ஈடுபட ஊக்குவிக்கும் விதத்திலும், வாழ்வாதார நிதியாக நடப்பாண்டில் 25 கோடி ரூபாய் வழங்கப்படும்.

**4. சென்னை மெரினா கடற்கரையில் 2024 டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற உணவுத் திருவிழாவின் பெரும் வெற்றியைத் தொடர்ந்து நடப்பாண்டில் 5 மண்டல அளவிலான உணவுத் திருவிழாக்கள் நடத்தப்படும்.**

சென்னை மெரினா கடற்கரையில் 2024 டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற உணவுத் திருவிழாவின் பெரும் வெற்றியைத் தொடர்ந்து, அனைத்து மாவட்டங்களின் தனித்துவமான உணவுப் பொருட்களை, ஒரே இடத்தில் பொது மக்கள் உண்டு சுவைத்து பயன்பெறும் வகையில் 5 மண்டலங்களில் உணவுத் திருவிழாக்கள் நடத்தப்படும்.

**5. நடப்பாண்டில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் 400 கோடி ரூபாய் அளவில் விற்பனை செய்வதை உறுதி செய்யப்படும்.**

நன்கு திட்டமிடப்பட்டு தேவையான ஒருங்கிணைப்புமூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் 400 கோடி ரூபாய் அளவில் விற்பனை செய்வதை உறுதி செய்யப்படும்.

**6. நலிவு நிலை மக்களுக்காக 100 கோடி ரூபாய் நலிவு நிலை குறைப்பு நிதி வழங்கப்படும்.**

நலிவுற்றோர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் பழங்குடியினர்களின் அவசரத் தேவைகளுக்காக, 202526 ஆம் ஆண்டில் 100 கோடி ரூபாய் நலிவு நிலை குறைப்பு நிதி ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் மூலம் வழங்கப்படும்.

**7. நடப்பாண்டில் 6,000 சுய உதவிக் குழுக்களுக்கு 90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்படும்.**

சுய உதவிக் குழுக்கள் மற்றும் அதன் உறுப்பினர்கள் தொழில் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக சமுதாய முதலீட்டு நிதி, பொருளாதார கடன் உதவியாக வழங்கப்படும். இந்த ஆண்டு 6,000 சுய உதவிக் குழுக்களுக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வீதம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலமாக 90 கோடி ரூபாய் சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்படும்.

**8. பண்ணை மற்றும் பண்ணை சாராத செயல்பாடுகளைச் சேர்ந்த 530 பல்வேறு வாழ்வாதாரக் குழுக்கள் 80.57 கோடி ரூபாய் செலவில் ஊக்குவிக்கப்படும்.**

வாழ்வாதார நடவடிக்கைகளில் ஈடுபடும் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு, தொகுப்பு அணுகுமுறை என்பது உற்பத்தி செலவுகளை குறைத்தல், லாபத்தை அதிகரித்தல், மேம்படுத்தப்பட்ட பேரம் பேசும் சக்தி ஆகியவற்றினால் பயனடைய உதவுகிறது. பண்ணை மற்றும் பண்ணை சாராத செயல்பாடுகளைச் சேர்ந்த 530 பல்வேறு வாழ்வாதாரக் குழுக்கள் 80.57 கோடி ரூபாய் செலவில் ஊக்குவிக்கப்படும்.

**9. திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள நான்கு வட்டாரங்களில் வறுமையை ஒழிக்கும் விதமாக 6,000 மிகவும் ஏழை மற்றும் நலிவுற்ற குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டு 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிலையான வாழ்வாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.**

2025-26 ஆம் ஆண்டில், திருவண்ணாமலை மாவட்டத்தை சார்ந்த ஜவ்வாது மலை, கலசப்பாக்கம் வட்டாரங்கள் மற்றும் விழுப்புரம் மாவட்டத்தை சார்ந்த வானூர் மற்றும் செஞ்சி வட்டாரங்களில் உள்ள 6,000 மிகவும் ஏழை, பழங்குடியினர் மற்றும் நலிவுற்ற குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டு, 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிலையான வாழ்வாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.



**10. அனைத்து மாவட்டங்களிலும் உள்ளூர் வல்லுநர்களைக் கொண்டு ஊரக இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்க 2,500 புதிய சமுதாயத் திறன் பள்ளிகள் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.**

உள்ளூர் மற்றும் பாரம்பரிய தொழிலில் ஈடுபட்டுள்ள செயல் வல்லுநர்கள்/நிபுணர்களைக் கண்டறிந்து அவர்களின்மூலம் அதே கிராமத்தில்/வட்டாரத்தில் சமுதாயத் திறன் பள்ளிகளை அமைத்து, ஊதிய வேலைவாய்ப்பு மற்றும் சுயதொழில் தொடங்குவதற்கு, ஆர்வமுள்ள இளைஞர்களைக் கண்டறிந்து தொழிற்பயிற்சிகள் அளிக்க, ஒவ்வொரு சமுதாயத் திறன் பள்ளிக்கும் 70 ஆயிரம் ரூபாய் முதல் 1 இலட்சம் ரூபாய் வரை வழங்கப்படும். நடப்பாண்டில் அனைத்து மாவட்டங்களிலும் 2,500 புதிய சமுதாயத் திறன் பள்ளிகள் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

**11. 15,000 சுய உதவிக் குழுக்களுக்கு 22.50 கோடி ரூபாய் சுழல் நிதி வழங்கப்படும்.**

சுய உதவிக் குழுக்களுக்கு அவர்களின் சேமிப்போடு, தொகுப்பு நிதியை அதிகப்படுத்தி கடன் இணைப்பு பெறுவதற்கு வழிவகுக்கும் வகையில் 22.50 கோடி ரூபாய் சுழல் நிதி வழங்கப்படும்.

**12. ஊரகப் பகுதிகளில் செயல்படும் சுய உதவிக் குழுக்களில் உள்ள ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கு ஆளுமை மற்றும் நிதி மேலாண்மைப் பயிற்சி சுமார் 3.82 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்**

சுய உதவிக் குழு உறுப்பினர்களின் தகுதி மற்றும் திறமையை மேம்படுத்த அடிப்படை பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு மகளிர் சுய உதவிக் குழுக்களின் ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கு ஆளுமை மற்றும் நிதி மேலாண்மைப் பயிற்சி மேலும் அரசால் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத் திட்டங்களைப் பற்றிய விழிப்புணர்வு பயிற்சி 3.82 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**13. வலிமையான இளைஞர்களை உருவாக்கி வளமான தமிழகம் படைத்திட, சுய உதவிக் குழு உறுப்பினர்களின் குடும்பங்களில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு மனநலம் காத்தல், மது மற்றும் போதை ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு பயிற்சி 2.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

சுய உதவிக் குழு உறுப்பினர்களின் குடும்பங்களில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு மது மற்றும் போதை பொருட்கள் பயன்பாடு ஒழிப்பு உள்ளிட்ட, மனநலம் குறித்த விழிப்புணர்வு பயிற்சி 2.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**14. சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்காக மாநில மற்றும் மண்டல அளவில் 5 வணிக சந்திப்புகள் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடத்தப்படும்.**

மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் உற்பத்திப் பொருட்களை மொத்த கொள்முதல் செய்யவும், வாங்குவோருக்கும் விற்போருக்கும் இணைப்பு மற்றும் வியாபார தொடர்பு ஏற்படுத்திட ஏதுவாக தொழில் அமைப்புகள் மற்றும் வர்த்தக அமைப்புகளுடன் மாநில மற்றும் மண்டல அளவிலான 5 வணிக சந்திப்புகள் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடத்தப்படும்.

**15. மாநில அளவில் அமைக்கப்பட்ட மதி அனுபவ அங்காடியின் வெற்றியைத் தொடர்ந்து, மேலும் 3 மதி அனுபவ அங்காடிகள் 1.50 கோடி ரூபாய் செலவில் மாவட்டங்களில் அமைக்கப்படும்.**

மாநில அளவில் சென்னை அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் அமைக்கப்பட்ட மதி அனுபவ அங்காடியின் வெற்றியைத் தொடர்ந்து, மேலும் 3 மதி அனுபவ அங்காடிகள் 1.50 கோடி ரூபாய் செலவில் மாவட்டங்களில் அமைக்கப்படும்.

**16. சுய உதவிக் குழு உறுப்பினர்களின் குடும்பங்களில் உள்ள பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் 20 இலட்சம் மாணவியருக்கு மாதவிடாய் சுகாதார மேலாண்மை குறித்த விழிப்புணர்வு பயிற்சி 1.31 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அளிக்கப்படும்.**

மாதவிடாய் சுகாதார மேலாண்மை குறித்த தேவையான புரிதல்களையும், தொடர்புடைய சுகாதார பிரச்சனைகள் குறித்த விழிப்புணர்வையும், வளர் இளம் பெண்கள் மற்றும் மாணவிகளிடையே ஏற்படுத்த சுய உதவிக் குழு உறுப்பினர்களின் குடும்பங்களில் உள்ள பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் 20 இலட்சம் மாணவியருக்கு, நடப்பாண்டில் 1.31 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாதவிடாய் சுகாதார மேலாண்மை பயிற்சி அளிக்கப்படும்.

**17. மாநிலம் முழுவதும், 100 மாவட்ட அளவிலான வேலைவாய்ப்பு முகாம்கள் மற்றும் இளைஞர் திறன் திருவிழாக்கள் 1 கோடி ரூபாய் செலவில் நடத்தப்படும்.**

கிராமப்புற இளைஞர்கள் பல்வேறு திறன் பயிற்சிகள் குறித்த விழிப்புணர்வைப் பெறவும், பயிற்சியில் சேர்ந்து பயன்பெறவும் மற்றும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கிடவும், 100 வேலை வாய்ப்பு முகாம்கள் மற்றும் இளைஞர் திறன் திருவிழாக்கள் 1 கோடி ரூபாய் செலவில் நடத்தப்படும்.

**18. பசுமை சூழலை உருவாக்கும் விதமாக நகர்ப்புறங்களிலுள்ள 50 பூங்காக்களின் பராமரிப்பை சுய உதவிக் குழுக்களால் மேற்கொள்வதற்காக 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.**

50 நகர்ப்புற பூங்காக்கள் சுய உதவிக் குழுக்களால், பராமரிப்பு மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதன்மூலம் பசுமைச் சூழலை ஊக்குவித்து, சுய உதவிக் குழுக்களுக்கு நிலையான வருமான வாய்ப்புகளை உருவாக்குவதை உறுதி செய்யப்படும்.

**19. மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் விதமாக அடுக்குமாடி மற்றும் பெருநிறுவனங்களில் 25 கண்காட்சிகள் 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடத்தப்படும்.**

சென்னை போன்ற பெருநகரங்களின் அடுக்குமாடி குடியிருப்புகளில் உள்ள குடியிருப்பு வாசிகள் மற்றும் பெருநிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்கள் மத்தியில், மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யவும், பிரபலப்படுத்திடவும், அடுக்குமாடி மற்றும் பெருநிறுவனங்களில் 25 கண்காட்சிகள் 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடத்தப்படும்.

**20. சிறப்பாக செயல்படும் சுய உதவிக் குழுக்கள் மற்றும் அவைகளின் கூட்டமைப்புகள் பட்டறிவுப் பயணம் மேற்கொள்ள 50 இலட்சம் ரூபாய் செலவில் பிற மாநிலங்களுக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள்.**

அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பாக செயல்பட்டு வரும் சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் வட்டார அளவிலான கூட்டமைப்புகளின் பிரதிநிதிகள் பிற மாநிலங்களுக்கு 50 இலட்சம் ரூபாய் செலவில் பட்டறிவுப் பயணம் அழைத்துச் செல்லப்படுவார்கள்.

**21. தேசிய மற்றும் சர்வதேச வாடிக்கையாளர்களை ஈர்க்கும் விதமாக மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் 1,000க்கும் மேற்பட்ட உற்பத்திப் பொருட்களை வர்த்தக இணைய தளங்களில் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பதிவேற்றம் செய்யப்படும்.**

2024-25ல் அமேசான், ப்ளிப்கார்ட் போன்ற இணைய வர்த்தகத் தளங்களில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இவ்வாண்டு மேலும் 1,000க்கும் மேற்பட்ட எண்ணிக்கையிலான மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் உற்பத்திப் பொருட்களை, இணைய வர்த்தகத்தின்மூலம் தேசிய மற்றும் சர்வதேச வாடிக்கையாளர்களை ஈர்க்கும் நோக்கில், மின்னணு வர்த்தக இணைய தளங்களில் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பதிவேற்றம் செய்யப்படும்.

**22. நகர்ப்புறத்தில் உள்ள 100 சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் விதமாக 100 மின் ஆட்டோக்கள் வழங்கப்படும்.**

நகர்ப்புறப் பகுதிகளில் 100 சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு தனியார் நிறுவனங்களுடன் இணைந்து வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் விதமாக 100 மின் ஆட்டோக்கள் வழங்கப்படும்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

---

## ‘நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ் மின்சார வாகனங்கள் –

# செயற்கை நுண்ணறிவுப் பயிற்சிகள் வழங்க ‘உயர்திறன் மையங்கள்’!

## ‘சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை மூலம் வழங்கப்படும்!’ என துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, மார்ச் 30-**

**சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் தமது பதிலுரையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், “சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை” தொடர்பான அறிவிப்புகளை வெளியிட்டார்.**

**அப்போது துணை முதல்வர் அவர்கள், ‘நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ் மின்சார வாகனங்கள் வழங்கப்படும் என்றும் - “செயற்கை நுண்ணறிவுப் பயிற்சிகள் வழங்க உயர்திறன் மையங்கள்” ஏற்படுத்தப்படும் எனவும் அறிவித்தார்.**

“சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை” தொடர்பாக - துணை முதல்வர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்புகள் வருமாறு:-

**1. நான் முதல்வன் திட்டத்தின்கீழ் SHELL மற்றும் Microsoft நிறுவனங்களின் பங்களிப்புடன் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு Electrical Vehicles மற்றும் Artificial Intelligence (AI) சார்ந்த பயிற்சிகள் வழங்க உயர் திறன் மையங்கள் நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)**

நான் முதல்வன் திட்டத்தின் வாயிலாக தமிழ்நாட்டில் உள்ள இளைஞர்களுக்கு வளர்ந்து வரும் தொழில்நுட்பத்திற்கேற்ப உலகளாவிய பாடத்திட்டத்துடன், தொழில் துறை சான்றிதழ்களுடன் கூடிய கட்டணமின்றி திறன் பயிற்சியை வழங்க உலகின் முன்னணி நிறுவனமாகிய SHELL நிறுவனத்தின் ரூ.2.50 கோடி CSR நிதியின் மூலமாக விழுப்புரம், காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, தர்மபுரி மற்றும் மதுரையில் உள்ள 6 அரசு பொறியியல் கல்லூரிகளில் நவீன கட்டமைப்புடன் கூடிய உயர் திறன் மையங்கள் (Centre of Excellence) நிறுவப்படும்.

Microsoft நிறுவனத்தின் ரூ.2.00 கோடி CSR நிதியின் மூலமாக, இரண்டு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளம் பெண்கள் மற்றும் மகளிரின் முன்னேற்றத்தை உறுதி செய்யும் பொருட்டு Artificial Intelligence (AI) உயர் திறன் மையங்கள் நிறுவப்படும். இதில், வருடத்திற்கு 25,000 இளம் பெண்கள் மற்றும் மகளிருக்கு, தொழில் மேம்பாடு மற்றும் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் விதமாக திறன் பயிற்சி வழங்கப்படும்.

**2. SCOUT (Scholarships for Outstanding Undergraduate Talent In Tamil Nadu) திட்டத்தின்கீழ் வரும் கல்வியாண்டில் தமிழ்நாட்டிலிருந்து 100 திறமையான இளங்கலை மாணவர்களுக்கு உலகளாவிய தொழில் பயிற்சிகள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)**

நான் முதல்வனின் SCOUT திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் உள்ள அரசு கல்லூரிகளில் பயிலும் பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள 100 திறமையான இளங்கலை மாணவர்களுக்கு தரவு அறிவியல், செயற்கை நுண்ணறிவு, உயிரிதொழில் நுட்பம் போன்ற துறைகளில் கல்வியில் சிறந்து விளங்கும் கீழ்க்காணும் அயல் நாட்டு பல்கலைக்கழகங்களுடன் இணைந்து உலகளாவிய உள்ளுறைப் பயிற்சி (Internship) வழங்கப்படும்.

தென் கொரியா Gachon பல்கலைக்கழகம் மற்றும் DGSIT பல்கலைக்கழகங்கள்

இங்கிலாந்து Teesside பல்கலைக் கழகம்

ஸ்காட்லாந்து HeriotWatt பல்கலைக் கழகம்

சுவீடன்Chalmers பல்கலைக்கழகம்

ஒரு மாணவருக்கு ரூ.1.50 இலட்சம் வீதம் 100 மாணவர்கள் சர்வதேச அளவிலான பயணம் மற்றும் இதர செலவினங்களுக்காக ரூ.1.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**3. தூய்மை இயக்கம்தமிழ்நாட்டிலுள்ள நகர்புற மற்றும் ஊரகப் பகுதிகளில் தினந்தோறும் உருவாகும் திடக்கழிவுகளை மேலாண்மை செய்வதில் ஒரு புரட்சியை ஏற்படுத்தும் வகையில் தூய்மை இயக்கம் என்ற ஒருங்கிணைந்த அமைப்பு சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின்கீழ் ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)**

இந்த இயக்கம் சுற்றுச்சூழல் ரீதியாக மட்டுமல்லாமல் பொருளாதார ரீதியில் சாத்தியமானதாகவும் மற்றும் நிலையான தொடர் செயல்பாட்டினை கொண்டுள்ளதாகவும் அமையும்.

ஊரக வளர்ச்சித் துறையின்கீழ் உள்ள தூய்மை தமிழ்நாடு நிறுவனம் (Clean Tamil Nadu Company Limited) இந்த இயக்கத்தின்கீழ் கொண்டுவரப்பட்டு ஊரக மற்றும் நகர்புற பகுதிகளை ஒருங்கிணைத்து செயல்படும்.

இந்த இயக்கம் அனைவருக்கும் தூய்மை மற்றும் சுகாதாரத்தை வழங்குவதற்கான நிலையான கட்டமைப்புகள் மற்றும் சமூக பங்களிப்பு (Community Engagement) ஆகியவற்றை புதிய முயற்சிகள்மூலம் உறுதி செய்யும்.

இந்த இயக்கம் ரூ.10 கோடி அரசு நிதி மற்றும் நகர்ப்புற ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதியிலிருந்து ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும்.

**4. தமிழ்நாட்டில் 11 பல்கலைக்கழகங்களில் நான் முதல்வன் பல்கலைக்கழக செயல் மையங்கள் ரூ.1.10 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்**

தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களில், 11 பல்கலைக்கழகங்களுடன் இணைந்து உயர்கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களின் செயல்திறனை மேம்படுத்த ஒவ்வொரு செயல் மையங்களிலும் ரூ.10 இலட்சம் மதிப்பில் நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் செயல்பாட்டு மையங்கள் நிறுவப்படும்.

நான் முதல்வன் திட்டங்களை திறம்பட செயல்படுத்துதல், தொழில் நிறுவனங்களுடன் நேரடி தொடர்புகளை ஏற்படுத்தி இன்டர்ன்ஷிப், அப்ரென்டிஸ்ஷிப் மற்றும் வேலைவாய்ப்புகள் ஏற்படுத்துதல், மாணவர்களுக்கு தொழில்முனைவு ஆலோசனை, திறன் பயிற்சிகள் வழங்குதல் மற்றும் செயல்திறன் மதிப்பீடு உள்ளிட்ட பணிகளை ஒருங்கிணைக்கும் திறன் மேம்பாட்டு மையமாக இம்மையம் செயல்படும்.

**5. நான் முதல்வன் பாடத்திட்ட சீரமைப்பு பிரிவு (Curriculum Development Cell) மற்றும் மதிப்பீடு பிரிவு (Assessment cell) ரூ.1.50 கோடி மதிப்பில் அமைக்கப்படும்**

கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம், இந்திய அரசின் தேசிய தொழிற்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் (NCVET) சான்றளித்தல் மற்றும் மதீப்பீடு நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக தொழில் நுட்ப மற்றும் கல்வி நிறுவனங்களுடன் இணைந்து, உலக தரத்திற்கு இணையான நிகழ்கால பயன்பாடுகளை உள்ளடக்கிய திறன் அடிப்படையிலான பாடத்திட்ட சீரமைப்பு பிரிவு (Curriculum Development Cell) மற்றும் மதிப்பீட்டு அளவீடுகளை கண்டறிய மதிப்பீடு பிரிவு (Assessment Cell) அமைக்கப்படும்.

பாடத்திட்ட சீரமைப்பு பிரிவு அமைப்பதற்கு ரூ.75 இலட்சம், மதிப்பீடு பிரிவு அமைப்பதற்கு ரூ.75 இலட்சம் என மொத்தம் ரூ.1.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.